# Fr Selvarajah Passed away

**ஈழத்தின் தமிழ் திருச்சபையில்**

**சுவாமி செல்வராசா ஒரு மகான்!**

அருட்திரு யோசப் பொன்னையா செல்வராசா சுவாமி எம்மை விட்டு விண்ணகம் சென்று விட்டார். அவருடைய நீண்ட வாழ்விற்கும் சேவைக்கும் நன்றி சொல்ல இலங்கைத் தமிழ் திருச்சபை மக்கள் எல்லோரும் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். ஏன்?

ஆயர்கள் குருக்கள் துறவிகள் இன்னும் பல பொதுநிலையினர் எமது திருச்சபையில் சரித்திரம் படைத்தவர்கள்: போற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் மறைந்த குரு செல்வா தமது வாழ்வாலும் சேவையாலும் தமக்கென்று ஒரு தனித்துவத்தை நிரூபித்திருக்கிறார்.

குருக்கள் இயேசுவின் வாழ்வையும் படிப்பினைகளையும் பின்பற்றி மக்களுக்காக வாழவும் பணி செய்யவும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். இது ஒரு சவால் நிறைந்த தேவ அழைப்பு. குருத்துவம் மனித பலவீனத்திற்கும் ஆசைகளுக்கும் எதிராக தொடர்ச்சியான போராட்டம். இதிலே பெரும் வெற்றி கண்டவர் சுவாமி செல்வராசா. ஏப்படி?

தன்நலம் தேடுவதும் அதற்காக முயற்சிப்பதும் மனித இயல்பு. ஆனால் சுவாமி செல்வா ஆரம்பத்திலிருந்தே இறுதி பரியந்தம் தனக்கென்று வாழா பிறருக்காக வாழ்ந்தவர், தன்நலம் தேடாத ஒரு பணியாளன்.

படிப்பில் பெரும் பட்டங்களைப் பெறவேண்டுமென்றோ, பதவியில் உயர்ந்த பொறுப்பதிகாரத்தை பெறவேண்டுமென்றோ முயற்சித்தவர் அல்லர். ஆனால் மற்றவருக்கு ஊக்கமும் உதவியும் கொடுத்து ஏற்றி வைத்தவர்.

ஆயர்களுக்கும் குருக்களுக்கும் பக்கபலமும், அவர்களை இணைக்கும் பாலமாகவும் செயற்பட்டார். அவர்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நல்லுறவையும் வளர்க்க பெரிதும் பாடுபட்டார். யாழ்-மரியன்னை பேராலயத்தை கட்டி முடித்ததும், குருக்கள் நலனுக்காக கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இல்லங்களை அமைத்தளித்தார்.

ஒரு மறைமாவட்ட குருவாக இருந்தாலும், துறவிகளின் வாழ்விலும் வளர்ச்சியிலும் பெரும் உதவிகளைப் புரிந்து அன்பையும் நன் மதிப்பையும் பெற்றவர்.

ஆறு வருடங்களின் முன் தன்னுடைய துறவற சகோதரி பெறோமுடன் பொன் விழாக்கொண்டாடினார். இவ்விருவரும் அவ்வாண்டில்

ஜேர்மனிக்கு வந்த பொழுது, இங்கே ஒரு நன்றிப்பலியை பல குருக்கள் நண்பர்களுடன் சேர்ந்து பெரு விழாவாகக் கொண்டாடினோம்.

ஆயர்களுடனும் ஆயர் இல்லத்திலும் எவ்வளவோ பொறுப்பான பணிகளை ஆற்றினாலும், எப்பொழுதும் மக்கள் தேவைகளையே மையப்படுத்தி பணி புரிந்தார். நூற்றுக்கணக்கான இளைஞருக்கு வாழ்வமைத்துக்கொடுத்தார். ஆயர் எமிலியானுஸ் இவரை வாகனம் ஓட்ட விடவில்லை. அதையும் நன்றாக ஏற்று சைக்கிளிலே யாழ் முழுவதும் ஓடி ஓடி பணி புரிந்தார். நோயாளரை வயோதிபரை சந்திப்பதிலும், குடும்ப பிரச்சினைகளிலே ஆலோசனை கொடுப்பதிலும் தமது பணியை ஆற்றினார்.

இயேசுவைப்போல் வாழ்வாலும் சொல்லாலும் செயலாலும் எல்லா மனிதருக்கும் எல்லா தருணத்திலும் நல்ல செய்தியை சொல்லி அவர்களை வாழ்வில் முன்னேற பணி புரிந்த இந்த மனிதர் ஆண:டவர் அருளும் நித்திய வாழ்வை அடைவாராக.

சகோதர குரு

பணியாளன் எஸ். ஜே. இம்மானுவேல்,

ஜேர்மனி, 02.08.2015

==========================================================================

